IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.48/2022
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.25 p.m.

வா.சா. 1 சாட்சி பரந்தாமன் த.பெ. இருளப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 14.11.2025 in accordance with the provisions of Act XX141.**

21,22, 24 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் பொன்னமங்கலம் ஆகும். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை கையெழுத்து செய்வேன். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதையை அடைக்கவேண்டும் என்று கோரியுள்ளேன். வழக்குச் சொத்து எந்த வருவாய் கிராமத்திற்கு உட்பட்டது என்றால் பொன்னமங்கலம் ஆகும்.

2. வழக்குச் சொத்து நன்செய் நிலமா, புன்செய் நிலமா என்றால் காடாக உள்ளது. வழக்குச் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து எவ்வாறு உள்ளது என்றால் காலியிடமாக உள்ளது. வழக்குச் சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் நான் 15 வருடத்திற்கு முன்பாக கிரையம் வாங்கிய சொத்தாகும்.

3. வழக்குச் சொத்திற்கு கிஸ்தி இரசீது உள்ளதா என்றால் பட்டா வாங்கியுள்ளேன். மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக தாக்கல் செய்ததாக பொய்யாக கூறுகிறேன்

என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு எந்த பக்கத்தில் பாதை உள்ளது என்றால் கிழக்கு பக்கம் ஆகும். அதன் நீளம், அகலம் தெரியுமா என்றால் 20அடி அகலம், 30 அடி நீளம் ஆகும்.

4. தாவாச் சொத்திற்குரிய FMB புலவரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணமாக FMB புலவரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் தற்போது பேவர் பிளாக் மற்றும் தெருவிளக்கு உள்ளது என்றால் சரியல்ல. தெருவிளக்கு மட்டும் உள்ளது.

5. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைய படித்து பார்த்துவிட்டு படிக்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 3ம்பிரதிவாதிக்கும், எனக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாகத்தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய எனக்கு சம்மதமா என்றால் சம்மதம். எனது பிராதுடன் தாக்கல் செய்த மாதிரி வரைபடம் தாவாச் சொத்திற்கு எந்த வகையிலும் பொருந்தாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு பின்புறமாக உள்ள இடத்தை அரசு அனுமதி பெற்றுதான் பிளாட்டுகளாக அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் உள்ள பாதை பொதுப்பாதை என்றால் சரியல்ல.

7. வழக்குச் சொத்தின் நான்குமால் மேற்கே எங்களின் இடமும், கிழக்கே குரும்பன் இடமும், தெற்கே நான் வாங்கிய இடத்தில் வீடும் உள்ளது வடக்கே யார் உள்ளார் என்று ஞாபகம் இல்லை. வழக்கை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாமல் 21, 22, 24 பிரதிவாதிகள்

இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்ற நிலையில் இவ்வழக்கில் சேர்த்துள்ளதால் இவ்வழக்கானது அவசியமற்ற தரப்பினர்களை சேர்த்த தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாச் சொத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

முடிவடையும் நேரம் :12.45 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.14 16:15:26 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.